
காலம்
மாறிப்போச்சு
சாரதி
சித்திரம்

**நடிக நடிகைகள்:**

**அஞ்சலிதேவி, R. கணேஷ், கிரிஜா, பாலையா, துரைராஜ், தங்கவேலு, சுப்பையா, சந்தானலக்ஷ்மி, T. K. பாலச்சந்திரன்.**

*மற்றும்-சீதாராம், சர்மா, கணபதிபட், ஈஸ்வர், சீனிவாசன், பெருமாள், கோவிந்தசாமி, நாராயணசாமி, ஆதிநாராயணா, நடராஜன், ராஜு, ரெட்டி, கிருஷ்ணமூர்த்தி, ராமலிங்கம், ராஜேஸ்வரி, முத்துலக்ஷ்மி, ராஜரத்னம், தேவயானை முதலியோர்*

**நடனம்**

**வஹிதா ரெஹ்மான்**

*பின்னணி பாடியவர்கள்:*

M. L. வசந்த குமாரி, ஜிக்கி, ராணி, திருச்சி லோகநாதன் T. M. சௌந்தரராஜன், S. C. கிருஷ்ணன்.

**நிர்மாணர்கள்**

| | | |
|---|---|---|
| வசனம், பாடல்கள் | — | முகவை இராஜமாணிக்கம் |
| திரைக்கதை | — | K. L. நாராயணா, தாபி சாணக்யா C, V. R. பிரசாத் |
| சங்கீதம் | — | மாஸ்டர் வேணு |
| நடனம் | — | வெம்பட்டி சத்யம் |
| ஆர்ட் | — | C. H. E. பிரசாத் ராவ் |
| ஸெட்ஸ் | — | செங்கையா |
| மேக்கப் | — | ஹரிபாபு, நாகேஸ்வர ராவ், போதராஜு, நவநீதம் |
| ஸ்டில்ஸ் | — | P. கங்காதர ராவ் |
| ஒளிப்பதிவு | — | கமல் கோஷ் |
| ஒலிப்பதிவு | — | சூரியநாராயணா, கிருஷ்ணன், கோடீஸ்வர ராவ் |
| ஸ்டுடியோ | — | வீனஸ் |
| லாபரேட்டரி | — | விஜயா—S.V. வெங்கடராமன், B.Sc., |
| எடிட்டிங் | — | சஞ்சீவி |
| புரொடக்ஷன் | — | T.G. கிருஷ்ணமூர்த்தி |
| உதவியாளர்கள் | — | J. கிருஷ்ணசுவாமி, D.V. கிருஷ்ணா ராவ், சஞ்சீவி, தம்பி, கண்ணன், P. ராமராவ் |

அசோசியேட் டைரக்டர் — G. கபீர்தாஸ்

**புரொட்யூசர்**
**C. V. R. பிரசாத்**

**டைரக்ஷன்**
**தாபி சாணக்யா**

**விலை 1 அணா**

# காலம் மாறிப் போச்சு

## கதைச் சுருக்கம்

வீராசாமி, ஓர் ஏழைக் குடியானவன். கடனால் சொந்த நிலத்தை இழந்து, கோவூர் மிராசுதார் தர்மலிங்கம் பிள்ளையிடம் குத்தகைக்குப் பயிர் செய்கிறான். அவன் மகள் காவேரியைக் கட்டிக் கொடுக்க வேண்டிய பாரமும் சேருகிறது. அதற்காகத்தன் மகன் வேணுவின் யோசனைப்படி தரிசு நிலச் சாகுபடி செய்ய முனைகிறான். கர்ணம் சாம்பசிவத்திடம் சொல்லிவிட்டு, தரிசு நிலச் சாகுபடி செய்தும், மிராசுதார் தூண்டுதலால் கர்ணமும், மிராசுதார் அடியாளான அண்ணுசாமியும் சேர்ந்து, அறுவடையில் பாதியைத்தட்டிக்கொண்டு போய்விடுகின்றனர்.

ராதா, மாஜி-சிப்பாய் ரெத்தினத்தின் வளர்ப்புப் பெண். கல்யாணமாகாத தாய்க்குப் பிறந்த ஒச்சம் இருந்தாலும், அவள் ஒழுக்கம் நிறைந்த உத்தமப் பெண். இவள் மாமன் அண்ணுசாமி இவளைக் கல்யாணம் செய்ய ஆசைப்படுகிறான். ராதா அவனை வெறுக்கிறாள்.

வீராசாமியும், அவன் மனைவி செல்லம்மாளும், மாத்தூர் வெங்கிடாசலம் மகன் சுந்தரத்துக்குக் காவேரியைக் கல்யாணம் செய்துகொடுக்க விரும்புகின்றனர். ஆனால் வரதட்சிணை கொடுத்தால்தான் கல்யாணம் என்கிறான் மாப்பிள்ளையின் தகப்பன். கடன் வாங்கி வரதட்சிணை கொடுக்க எண்ணி, வீராசாமி, தன் மகன் வேணுவுடன் மிராசுதாரிடம் போகிறான். வீட்டை அடமானம் எழுதிக்கொடுத்தால், கடன் கொடுப்பதாக சொல்கிறார், மிராசுதார். மிராசுதார் வஞ்சகத்தை உணர்ந்த வேணு பத்திரத்தில் கையெழுத்துப் போட மறுக்கிறான். தங்கை கல்யாணத்தில் அண்ணனுக்கு இஷ்டமில்லை என்று வீண் சண்டை மூட்டிவிடுகிறான் கர்ணம். வீராசாமிக்கு வேணுமீது கோபம் வருகிறது.

மனக்குழப்பமடைந்து வாடியிருக்கும் வேணுவை, ராதா தேற்றுகிறாள். காதல் ஜோடிப் புறாக்கள் அடிக்கடி சந்தித்து ஆடிப்பாடிக் களிக்கின்றனர்.

காதலர்கள்மீது பொறாமை கொண்ட கர்ணமும், அண்ணாசாமியும், வேணுவையும், ராதாவையும் ஒருநாள் வீராசாமியிடம் இழுத்துக்கொண்டு போய்விடுகின்றனர். ராதாவை மணந்து கொள்ள முடிவு செய்துவிட்டதாக வேணு அறிவிக்கிறான். இதனால் மகனை வீட்டை விட்டுத் துரத்துகிறான் வீராசாமி.

ஆயினும், வேணு—ராதா திருமணத்தை நடத்தி முடிக்கின்றனர் அந்த ஊர்க் குடியானமக்கள். இணைந்த காதலர்கள் இல்லறம் நடத்துகின்றனர். வேணுவும் குடியானவர்களும் தரிசு நிலம் பெற்று வெள்ளாமை செய்ய விரும்பி, கர்ணம் வீட்டுக்குப் போகின்றனர். தரிசு நிலமே அந்த ஊரில் இல்லை என்கிறான் கர்ணம். அதனால் கலெக்டர் விசாரணை நடத்துகிறார். கர்ணத்திற்கு வேலை போகிறது, மிராசுதாருக்கு அபராதம் கிடைக்கிறது.

தோல்வியால்ஆத்திரமடைந்த மிராசுதார், குடியானமக்கள் தரிசு சாகுபடி செய்யாமல் கெடுக்கப் பல சூழ்ச்சிகள் செய்கிறார். அடியாளாக இருந்த அண்ணாசாமியையும் ஒரு நாள் அடித்துத் துரத்திவிடுகிறார். அண்ணாசாமி தன்தவறுகளை உணருகிறான். குடியான மக்களோடு சேர்ந்து திருந்தி, நல்வழிப்படுகிறான்.

சுந்தரம் — காவேரி கல்யாணம் நடக்காமல் தடுக்க, கர்ணத்தை மாத்தூர் வெங்கிடாசலம் வீட்டுக்கு அனுப்புகிறார் மிராசுதார். அதன் பயனாக அதிகமாக வரதட்சணை வேண்டுமென்று பிடிவாதம் செய்கிறான் வெங்கிடாசலம். இதனால் மனம் வெதும்பிய வீராசாமி, ஒரு மூணாந்தாரக்காரன் தலையில் காவேரியைக் கட்டிவிட ஏற்பாடு செய்கிறான். இந்த அநியாயத்தை அறிவிக்க அண்ணனிடம் ஓடி வருகிறாள் காவேரி. இது கேட்ட ராதா மாத்தூருக்கு உடனே சென்று சுந்தரத்தைக் கோபித்துக் கொள்கிறாள். இது வெங்கிடாசலத்துக்குத் தெரிகிறது. தகப்பனுக்கும் மகனுக்கும் வாய்ப்பேச்சு வளர்கிறது. ஆனாலும், மகன் சம்மதப்படி, வரதட்சிணையே இல்லாமல் கல்யாணத்தை நடத்த ஒப்புக்கொள்கிறான் வெங்கிடாசலம்.

இதை அறிந்த மிராசுதார், வீராசாமியை அழைத்து வரச் சொல்லி, சுந்தரத்துக்குப் பெண் கொடுக்கக் கூடாதென்று அவனை மிரட்டிப் பயமுறுத்துகிறார். இதைக் கேட்டதும், மனம் பொறுக்காத வீராசாமி, ஆத்திரமும், ஆவேசமும் கொள்கிறான்.

மற்றவை திரையில்.

# பாடல்கள்

## இயற்றியவர் : முகவை இராஜமாணிக்கம்

### 1 வேணு & குடியானவர்கள்—கோரஸ்
பாடியவர்கள் திருச்சி லோகநாதன் & கோஷ்டி

பொலியோ பொலியோ......பொலியோ
ஆயிரக் கலம் காண அருள்வாய் பொலித்தேவி —ஹேய்
பொலியோ பொலி பொலியோ பொலி
ஆயிரக்கலம் தரவே வாம்மா பொலி
அம்பாரம் தந்திடவே வாம்மா பொலி

விடிவெள்ளி தோன்றியே வானிலே ஏறுதே
கொக்கரக்கோ வெனக் கோழியும் கூவுதே
அல்லோலப் பட்டுலகம் துள்ளி எழுந்திட்டதே
பாட்டிக் கதைக் கோட்டிகளின் ஆட்டம் முடிந்திட்டதே
—பொலியோ

மேலிடத்தார் லஞ்ச வாதை யற்றிருக்கணும்
வட்டிப் பேய் வாய்தனில் வீழாதிருக்கணும்
நெற்றி வியர்வைப்பலன் நம் கைக்கே கிட்டணும்
விளைகாணி கொழிக்கணும் நம்வீடு செழிக்கணும் —பொலியோ

பயிரிடுவதோ ஒருவன் - பலனை அடைவோ னொருவன்
மரம் நடுவதோ ஒருவன் - பழம் முழுங்குவோ னொருவன்
பசுவை மேய்ப்போ னொருவன் - பால்தயிர் தின்போ னொருவன்
பாடு படுவோ னொருவன் - புசித்துக் களிப்போ னொருவன்
—பொலியோ

வீட்டு மணியம் ஒருவன் - வீதி மணியம் ஒருவன்
ஊரு மணியம் ஒருவன் - தேச மணியம் ஒருவன்
எல்லோரும் பல்லக்கில் ஏறி உட்கார்ந்திட்டால்
யார் தான் சுமப்பவர் என்றே விளங்கல்லே —பொலியோ

கோவணம் பத்தாதென்று ஓலமிடுவோ னொருவன்
கோடி உடை இல்லை யெனக் கோட்டிசெய்வோ னொருவன்
பிடி சோறில்லா தொருவன் துடியாய்த் துடிக்கவே
சீரணிக்காதொருவன் திக்கு முக்காடுறான் —பொலியோ

உள்ள வரி தர ஒருவன் முடியாமல் திணறுறான்
புதிய வரி போட்டொருவன்-பிழியவே பார்க்கிறான்
தரிசிலாதே யொருவன் மனுப்போட்டுக் கெஞ்சுறான்

ஊருநிலம் வளைச்சொருவன் குத்தகைக்கு விடுகிறான்
—பொலியோ

பஞ்சம் நீட்டிய கொடும் சுமை தூக்கலானதே
பலர் வாய்க்குமே பயந்து வாழ்ந்திடவும் ஆனதே
விற்கப் போனால் பூனை வாங்கினால் யானை விலையே
நியாயத்தைக் கேட்க ஒரு நாதியே இல்லையே —பொலியோ

ஓம் தொந்திக் கணபதியே கொழுக்கட்டை படைக்கிறோம்
காவேரித்தாயே பொங்கலும் இடுகிறோம்
குருணிக்குக் கலமாக மகசூலும் பெருகிட்டால்
பொலி பொலியோ என உன்னைப் பூ வைச்சுக்கும்பிடுறோம்
—பொலியோ

புணையல் மாடு புணையல் மாடு பாருங்களேன்
மயிலைக்காளை புணையடிக்கப் பாருங்களேன்
ஹேய் - செவளைக்காளை புணையடிக்கப் பாருங்களேன்

நரை எருமை மிதிச்சமணிக்குவி உயரப்பாரு—பாருங்களேன்
எருமைகள் மிதிச்ச மணி உயருதே பாரு—பாருங்களேன்
குவியலிலே பொலித் தேவி
ஹைஹ—குலவை யிடுறாளே
போர் முகட்டில் பொலித் தேவி
ஹைஹ—சாய்ந்தாடுறாளே
களத்து மேட்டில் பொலித்தேவி
ஹைஹ—குதித்தாடுறாளே
வயலதனில் பொலித்தேவி
ஹைஹ—பரண் கட்டுறாளே —புணையல்
ஓ......பொலியோ பொலி பொலி பொலி
பொலியோ பொலி ......

---

## 2 ராதா

பாடியவர் பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி.)

ஆடுவோமா கூடிக்குலவி?
பாடுவோமா நாமினி? —ஆடுவோமா
எவரும் இங்கில்லை இதயக்கலி தீரவே
—ஆடுவோமா
மலர்கள் பார்த்துக் கைகள் கோர்த்து
ஆ மெனத்தலை ஆட்டவே

மெல்லக் கூசி தென்றல் வீசி
தயக்க மெல்லாம் தீர்க்கவே
பூங் கோதுகள் ஆடவே
வானத்துள்ளோர் காணவே

இவ் இலைகளோடு இலைகளாய்
மலர்க ளோடு மலர்களாய்
கலந்து சேர் வோமே
நமக்கது வாழ்வாகுமே —ஆடுவோமா

அடுக்கு மல்லி தொடுக்கும் முல்லை
அழகு ரோஜா மலராலே

ஆரம் தொடுத்தால் போதாதோ?
கோடி விலையும் காணுதோ?
அழகே தவழ் ராணியே
அமுதூறும் சிங்காரியே

இனி உன் மனமும் என் மனமும்
இணைந் தொன்றாக வாழ்வோமே
அது ஆனந்தமே
மனதுக்கதே இன்பமே —ஆடுவோமா

---

## 3 காவேரி

பாடியவர் எம். எல். வசந்தகுமாரி

எண்ணம தெல்லாம் நீயே—நிறைந்து
இனிப்பதும் இந்நாளே —எண்ண
எந்தன்—கண்கள் சிலிர்க்க நீ களி நடம் புரிவதைக்
காண்பதும் இந்நாளே —எண்ண

உந்தன் - வண்ண உருவினை மனத்தில் இருத்தி—நான்
மகிழ்வதும் இந்நாளே—என்
விண்ணமுதே எனை யீன்றவளே - உனை
வாழ்த்தி வணங்கேனோ —விண்ண

தினம் தண்ணருள் தாராய் தண்ணருள் தாராய்
என்று துதிக்கேனோ

---

## 4 வேணு—ராதா

பாடியவர்கள் திருச்சிலோகநாதன்,
பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி)

வேணு & ராதா: இனிதாய் நாமே இணைந்திருப்போமே
ஏதுக்கினி வீண் பேச்சு —இனிதாய்

ராதா: நேர் பார்வைதானே சிந்துது தேனே
புன்னகை ரேகை பொன் ஒளியாமே
இதயமே அன்பில் மூழ்குதே
வாய் மொழிந்த சொல்லே
வண்ண மலர்ப் பாதையாமே

வேணு: எழில் வரிசையிலே நிறை குணமதிலே
முதலிடம் நீயே உணர்ந்து கொள்வாயே
வாழ்வதனில் மேன்மை காட்டுவாய்
உன் நோக்கே போதும் அதுவே
கோடி கோடியாமே—இனிதாய்

வேணு & ராதா: பூ லோக மெதுவோ புகழ் லோக மெதுவோ
மனமொடு சேர்ந்தே உடல் தவழ்ந்திடுதே
வாழ்வினி ஆடும் ஊஞ்சலே
வாயூறும் காதல் போற்றிப் பேணி
வாழுவோமே—இனிதாய்.

---

## 5 அண்ணுசாமி

பாடியவர் கே. சி. கிருஷ்ணன்

அக்கா மாரே, அண்ணன் மாரே
கேட்டிங்களா இந்த சேதி
கண்டிங்களா இந்த விந்தை
நானே மாப்பிள்ளை நானே மாப்பிள்ளை
நானே மாப்பிள்ளை நானே மாப்பிள்ளை
கனி மரங்காள் பனி மலைகாள்
மானிடர்காள் வன மந்திகளே! —நானே

பந்து சனங்களும் வரலேன்னு
மேள தாளங்களும் இல்லேன்னு

பொண்ணைத் தந்தாலும் தரலேன்னாலும்
கழுத்தில் தாலியைக் கட்டிடுவேன்
நல்ல சான்சுமே அடிச்சிடுவேன் —நானே

அழைச்சிட்ட பேருக்குத் தாட்டெலை போடுவேன்
அழைக்காமே நுழைஞ்சால் கதவை மூடுவேன்
அத்தே மாமன் ஆ ஊம் இன்னு
உருட்டு மூங்கிலால் அடிச்சிடுவேன்
லபோ லபோ லபோ என
வாயிலடிக்கச் செய்திடுவேன் —நானே

பஞ்சணை மெத்தை போட வைப்பேன்
பட்டுத் தலையணையில் சயனிப்பேன்
பொண்ணு கொண்டாந்த வெத்திலை எல்லாம்
பொண்ணுமே, பொண்ணுமே, புதுப் பொண்ணுமே
என் பொண்ணுமே - என் பொண்ணு
கொண்டாந்த வெத்திலை எல்லாம்
காம்பு விடாமலே மெய்ஞ்சிடுவேன்,
அ ஹ ஹ ஹ ஹா - அ ஹ ஹ ஹ ஹா
அ ஹ ஹ ஹ ஹா - என ஆனந்திப்பேன் —நானே

நான் வாய் திறந்தால் நாடே நடுங்கும்
நான் கை ஓங்கினால் ஊரே அடங்கும்
மாமன் மூளையிலே உலகமே உருளும்
எத்தர் கும்பலுக்கே ஈரல் கலங்கும்
கேட்டிங்களா இந்த சேதி
கண்டிங்களா இந்த விந்தை
மரம் செடி கொடிகாள் மணல் மேடுகளே
வானத்தில் செல்லும் வண்ணப்பறவைகாள்
—கேட்டிங்களா

ப ச ச னி ச ரி ச னி ம னி னி த னி ச னி த

ம த த ப தா - த ச னி த ப ம பா. —நானே

## 6 ஏர்உழுதல்—நடனப் பாட்டு

பாடியவர் பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி.)

கள்ளம் கபடம் தெரியாதவனே
உலகம் போவது புரியாதவனே —கள்ளம்

ஏரு பூட்டிப் போவாயே அண்ணே சின்னண்ணே
உன் துன்பமெல்லாம் தீருமே அண்ணே சின்னண்ணே

நவ தானியத்தைத் தலையில் சுமந்துக்கினு
பழைய கஞ்சியைக் கலயத்தில் ஊத்திக்கினு
தாருக்குச்சியைக் கையில் எடுத்துக்கினு
பெண்சாதியையும் கூட இட்டுக்கினு —ஏரு

மேலத் திசையிலே வானவில் பாராய்
இடியும் மின்னலும் மழையும் பாராய்
ஓடையும் கால்களும் பாய்வது பாராய்
உலர்ந்த பொட்டலில் அருகினைப் பாராய் —ஏரு

மேழியை நேர் செய்து ஆழ உழுதுக்கோ
எடத்திலே வலத்திலே எருதைப் பூட்டிக்கோ
சாலு விடாமலே நிரையைப் புடிச்சுக்கோ
விதையை எல்லாம் விசிறி விதைச்சுக்கோ —ஏரு

காணியை வித்துட்டுப் போகிற வங்கோ
டவுனிலே பங்களா கட்டுற வங்கோ.
பாங்கிலே பணத்தைப் பதுக்கிற வங்கோ
உன் வல்லமை தனை உணராத வங்கோ —ஏரு

உள்ளூர்தனிலே செல்லாதவங்க
கட்சி கட்டியே குடல் வளர்ப்பவங்க
தேச சேவை எனக் கூவுற வங்க
உடம்பை வளைச்சு உழைக்கமாட்டாங்க —ஏரு

பதவிகள் சத மெனக் குதிக்கிற பேரும்
ஓட்டு வாங்கி யுனை மறக்கிற பேரும்
நீயே கதி என வருவார் வாராய்.
காலம் மாறியதே காலம் மாறியதே
காலம், காலம், காலம், காலம் மாறியதே — ஏரு

## 7 வேணு & குடியானவர்கள்—கோரஸ்

பாடியவர்கள்

திருச்சி லோகநாதன் & பார்ட்டி.

வேணு : வாங்கண்ணே போவோமே நாமே—கூடி
வாங்கண்ணே போவோமே நாமே—நொடியில்
மலைக ளெல்லாம் பொடிப் பொடியாக்கித் தகர்ப்
போமே—வாங்கண்ணே

நந்தி தேவன் உறுமி செவிதூக்கி வர்ராண்ணே
பண்ணையாள் நம்மோடு துணையாக வர்ராண்ணே
பூ தேவி அருளுண்டு புளகாங்கிதம் உண்டு
முத்தாரம் மணியாரம் போலப் பொலியும் உண்டு
——வாங்கண்ணே.

ஏருழு வோ ரேழை சொர்ணமே பூங்காணி
ஏடு பதினாயிரமும் ஈடதோ மேழிக்கே
ஊக்கமாய் நாமெல்லாம் ஒன்றாக வாழணும்
பஞ்சப் பேயின் மண்டை சுக்கு நூறாகணும்
—வாங்கண்ணே

பொருனை காவிரி பெண்ணை பாலாறு நீள் நதிகள்
பொங்கி வெண்ணுரை தள்ளிப் புலங்களில் பாயணும்
கரை புரண்டோடியே கால்களில் பாயணும்
நீங்கிடா வறுமையும் நீங்கி யொழிந் தோடணும்
—வாங்கண்ணே

தரிசு நிலம் யாவையும் உழுது நல் வயலாக்கி
காடாய்க் கிடந்ததைத் திருத்தியே சீராக்கி
வானத்து மழை நீரை எவர் தடுத்தாலுமே
பாய்ந்தோடச் செய்வோம்.
குடியோங்கச் செய்வோம்.
காவேரித்தாயே நீ கல கலென வாவா நீ
உருண்டுமே இரைந்துமே சுழித்து ஹோ வெனப்
—பாய் நீ

சல சலா கல கலா
கல கலா சல சலா

நதி பெருகிப் பாய்ந் தோட
ஓடை நீளருவியும் ஒன்று சேர்ந்துருண்டோட

அசைந்தாடி வாம்மா
குதித்தோடி வாம்மா
பொங்கியே வாம்மா.

---

## 8 வேணு, ராதா & குடியானவர்கள்—கோரஸ்

பாடியவர்கள் திருச்சி லோகநாதன்
பி. ஜி. கிருஷ்ணவேணி கோஷ்டி

ராதா
மாரியே கேளம்மா காணியிலே நாத்து நடும்
நாங்கள் படும் பாடதனைக் கேளேன் —மாரியே.
கருக்கலிலே வரச்சொல்லிக் கூச்சலிடுவாங்க
மத்தியானக் கஞ்சிக்கும் விடவும் மாட்டாங்க
சூரியனும் கூட்டிலே அடஞ்சு தூங்கும் வரை
நாத்து நடும் போதினில் நிமிரவிட மாட்டாங்க
—மாரியே

வேணு
குடல் தீஞ்ச நாங்களோ கால் கையிலே விழுந்தால்
நாளைவா எனச் சொல்லி அலையவிடுவாங்க
இண்ணைக்கி இல்லையென எரிஞ்சு விழுவாங்க
சாதனை செய்திட்டால் சிணுங்கியே முணங்கியே
சின்னப்படியால் நமக்குக் குறைநாழி அளப்பாங்க
—மாரியே

ராதா
எந்தப் பாடானாலும் காலம் பூராவுக்கும்
இம்மி வேலையும்கூடக் கிடைக்காதுங்க •
கடனுடனை வாங்கி வயிறு பிழைக்கணுமிங்க
சோத்துக்கே போராது துணிக்குமே மீராது
வயித்தை வாயைக்கட்டி காலங்கழிக்கணும்—மாரியே

வேணு:
கைமாத்துக் கேட்டாலும் காணியிருக் காம்பாங்க
கை யை விரிச்சு இல்லை என்பாங்க
உதட்டைப் பிதுக்கி மிஞ்சிக் கொள் வாங்க

அடிதாழ்ந்து கெஞ்சினால் ராப்பகலாய் ஓயாமல்
வெட்டி வேலைகள் சொல்லி உயிரோடு கொல்வாங்க
—மாரியே.

ரா-வே: இடர்ப்பட்டு வயிறெரிஞ்ச துன்பமெல்லாம் ஏகி
இன்ப நாள் வந்ததே இன்றே
மக்கள் சொல் லே வெற்றி பாரீர்
பொன்னையே விளை விப் போம் வாரீர்
பாடு பட்டுழையாமல் வீம்பு பேசித்திரிந்த
பழங்காலம் மலை யேறிப் போனதே, போனதே
—பழங்காலம்

---

## 9 ராதா, காவேரி & வேணு

பாடியவர்கள் திருச்சி லோகநாதன்,
பி. ஜி. கிருஷ்ணவேணி (ஜிக்கி) & ராணி

காவேரி: புன்னகை தனை வீசி இனிதாய்
என தாசைகள் பலித்தனவே —புன்னகை
மனமேவும் நினைவுகள்-பூவாய்ப் பூத்துக்
காதல் சுரந்ததுவே. —புன்னகை

பாய்ந் தோடுதே குளிரோடைகளே
தலை நீட்டுதே உணர்வுகளெல்லாம்
சிலிர்த்திடுதே புதுமைக்கலையே
உலுக்கிடுதே எண்ணமெதல்லாம்

ராதா: அக மூறும் எழில் மாரனுமே
அருங்காதல் காட்டினான்
ஆ ஹாஹா வலையில் சிக்கினனே
ஆ ஹா உன் வலையில் சிக்கினனே

அது என்ன மோம்மா
இனிதாய் உனதாசைகள் பலித்தனவே —புன்னகை

வேணு: மயில் கண் கரை சேலை கட்டி
மலர் சூடி உலாவி நடந்தால்
நிறை நெஞ்சுக்கு வளர்ந்த கதிரே
உனை நோக்கிக் கண்ணைச் சிமிட்டுதே

ராதா: நெற் கன்னியோ வா வென—உன்னை
ஜாடை செய்யுது பாரதோ
பொலிப் பாட்டுப் பாடு என அழைத்திடுதே
பொலிப் பாட்டுப் பாடு என அசைந்திடுதே
அது என்ன மோங்க
இனிதாய் நமதாசைகள் பலித்தனவே. —புன்னகை.

காவேரி: நெற்குலை வெளி வந்திடும் போதே
அண்ணிக்குமே மசக்கை தோணுதே
குழப்பமெல்லாம் ஓய்ந்ததே
ஒளி வீசும் காலம் வந்ததே

வேணு: நாம் செய்த தவமும் பலித்து
பாப்பா தவழ்ந்து ஆடுமே

மூவரும்: கதிரீனு மேல் களஞ்சியம் நிறைஞ்சிடும்
நாடெங்கணும் நன்மை கை கூடிடும்
ஆனந்த மாகும்—இனி தாய் நமதாசைகள்
பலித்தனவே—புன்னகை.

---

## 10 சுந்தரம்

பாடியவர் டி. எம். சௌந்திரராஜன்

வண்டி போகுது வண்டி போகுதே
ஜோடியே பூட்டி—கல்யாண வீட்டு
வண்டி போகுது வண்டி போகுதே —வண்டி

ஓச்சமே இல்லாத வண்டி
அச்சுமே அலுங்காத வண்டி
காலச் சக்கரமதினும் கடிதாய்
பறந்து ஜம்மெனச் செல்லும் வண்டி —வண்டி

மயிலை யின்று மயிலை தான்—இந்த
வண்டிக்கேத்த மயிலை தான்—ஹேய்
அந்தமான மயிலைதான்—பல்
பந்தயத்து மயிலைதான்
கழுகுமலை சந்தையிலே

குதி போட்ட மயிலே தான்
தஞ்சாவூரு சாலையிலே
திராட்டெடுத்த மயிலேதான்
சங்குப்பாசி மயிலே தான்
நெத்திச் சுட்டி மயிலே தான்
ரெண்டு பல்லு மயிலே தான்
பாய்ச்சல் போகும் மயிலே தான்
மேலே கை பட்டு விட்டால்
மின்னல் வேக மயிலே தான் —வண்டி

கல்யாண மின்னு கல்யாணம்
பேரு பெத்த கல்யாணம்—இது
பேருபெத்த கல்யாணம்
வீதி தோறும் நிக்க வச்சு
நூறு நூறாய் எலம்போட்டு
வெறி யாட்ட மெல்லாம் போட்டு
பெத்த வங்க காலைக் கட்டி
வீடு வாசலே அடகு வச்சு
மாப்பிள்ளைக்கு ரொக்கம் வச்சு
பந்து ஜனம் எல்லோருக்கும்

விருந்துக்கு பதில் முதுகில் வச்சு
ரகளை நடக்கும் கல்யாண மில்லே
அமர்க்களக் கல்யாண மில்லே
செல்லக் கல்யாணமிதே—வெகு
விமரிசைக் கல்யாணமே —வண்டி

கிராமத்துள்ள கனவாங் கெல்லாம்
பலே பலே என மெச்சும் வண்டி
அரி தேவாதிகள் மறிச்சிட்டாலுமே
அடக்க முடியாதற்புத வண்டி
மணிதரும் கணை கணை நாதத் தோடே
ஹேய்-சலங்கை கல கல சப்தத் தோடே
கலியாணப் பந்தலிலே
ஜல்லு ஜல்லு எனத் தாவும் வண்டி —வண்டி

Janatha Press, Madras 5.



சாரதி
சித்திரம்....
காலம்
மாறிப்போச்சு